Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk
தமிழ்Mirror
FRIDAY, JULY 1, 2022
வெள்ளிக்கிழமை ஜூலை 01, 2022 | ஒளி: 08 கதிர்: 037 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

எரிபொருளை பெற்றுக்கொடுக்க தவறின்

# 14 நாள்களில் சுகாதாரம் முற்றாக வீழ்ந்துவிடும்

சுகாதாரத்துறைக்கான எரிபொருளை பெற்றுக்கொடுக்க தவறினால் அடுத்த இரண்டு வாரங்களில் ஒட்டுமொத்த சுகாதார கட்டமைப்பும் வீழ்ச்சியடையும்; அதுமட்டுமல்லாது வைத்திய கட்டமைப்பு வீழ்ச்சி கண்டால் பொதுமக்கள்

தொடர்ச்சி P2

# பஸ் கட்டணம் 22 சதவீதத்தால் உயர்வு

## குறைந்தபட்ச கட்டணம் 40 ரூபாய்



பஸ் கட்டணத்தை 22 சதவீதத்தால் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து சபையின் பணிப்பாளர் நாயகம் திலான் மிருண்டா தெரிவித்துள்ளார். அதற்கமைய நேற்று (30) நள்ளிரவு முதல் பஸ்கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

பொருளாதார, கட்டமைப்புசார் கொள்கைத்திட்டத்தை வகுப்பதில்

# கணிசமான முன்னேற்றம்




## ஐ.எம்.எப் கண்காணிப்பு அறிக்கையில் தெரிவிப்பு

## தூரநோக்கு வரிச் சீர்திருத்தங்கள் அவசியம்

## இக்கட்டான நேரத்தில் இலங்கை மக்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவோம்

இலங்கை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு வார்த்தைகளின் போது நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான பொருளாதார மற்றும் கட்டமைப்பு சார் கொள்கைத் திட்டத்தை வகுப்பதில் இலங்கை கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கைக்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதிகளை வழங்கும் முகமாக பணியாளர் மட்டத்திலான ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சர்வகட்சி அரசாங்கமே அத்தியாவசியமானது

பா.நிரோஸ்



சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்பது இனியும் கோரிக்கையாக இருக்காது. அது அத்தியாவசியமான ஒன்றென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்து ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அதனை செய்வதற்கு இந்த அரசாங்கம் ஒருபோதும் ஒத்துழைக்காது. அதேபோல், 2020ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என நாம் கோரிக்கை விடுத்தோம். எனினும், அப்போது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போதே சென்றிருந்தால் இந்த அளவுக்கு படுமோசமான நிலைக்கு நாடு வந்திருக்காது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 22 ஆவது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கமைய தற்போது 22ஆம் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

100,000 மெட்ரிக் தொன் எரிவாயுக்கு

# உலக வங்கியுடன் லிட்ரோ கைச்சாத்து

## 70 மில். டொலரை வழங்குகின்றது உலக வாங்கி




நாட்டில் நிலவும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டு நிலைமையில், 100,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை இலங்கைக்கு கொள்வனவு செய்வதற்கான உலக வங்கியுடனான ஒப்பந்தத்தில், லிட்ரோ நிறுவனம் சார்பில் அதன் தலைவர் முதித்த பீரிஸ்

தொடர்ச்சி P2

இம்மாத இறுதிக்குள்

# ஐ.எம்.எப் பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கை கைச்சாத்திட சாத்தியம்

இலங்கையின் நெருக்கடி நிலைமைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் தனது கண்காணிப்புகளை நிறைவு செய்துள்ள நிலையில், இந்த மாத இறுதிக்குள் பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கையை கைச்சாத்திட வாய்ப்புகள் உள்ளதாக நிதி அமைச்சு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கையிருப்பை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராகவுள்ளதாக அரசாங்க உள்ளக தகவல்கள் மூலமாக தெரியவருகின்றது.

தொடர்ச்சி P2



குறுகிய காலத்திற்கு

# அரசாங்கத்தை கைப்பற்ற தயாராக உள்ளோம்

நாங்கள் குறுகிய காலத்திற்கு அரசாங்கத்தை கைப்பற்ற தயாராக உள்ளோம். அடிப்படை பிரச்சினைகளை குறுகிய காலத்தில் தீர்த்து தேர்தலை நடத்தி ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்கி சில வருடங்களில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தவறான தீர்மானம் காரணமாக நாடு முழுமையாக முடங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



# கட்டார் தொண்டு நிறுவனம் மீதான தடை நீக்கம்

கட்டார் தொண்டு நிறுவனம் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனது டுவிட்டர் பதிவில், “கட்டார் தொண்டு நிறுவன அதிகாரிகளை நேற்று முன்தினம் (29) சந்தித்தேன். இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் அறக்கட்டளையின் பணிகள் குறித்து

தொடர்ச்சி P2





# நாங்கள் காத்திருக்கின்றோம்...

எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் நிற்பதையே அவதானித்து வருகின்றோம். எனினும், ஓட்டோவொன்று மின்சார கம்பத்தில் கட்டி தொங்கவிடப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

ராஜகிரிய, ஒபேசேகரபுரவிலேயே இவ்வாறு தொங்கவிடப்பட்டுள்ளது. அப்பகுதியில், நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் எரிபொருள் மற்றும் பேட்டரிகள் திருடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# அது நான் இல்லை




கட்டாரில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றில் தாம் அங்கத்துவம் பெற்றுள்ளதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்து உள்ளார். அந்த நிறுவனத்துக்கும் தனக்கும் எந்த

தொடர்ச்சி P2

# குறுகிய காலத்துக்குள் நெருக்கடி நிலைமைகள் குறையும்

நாடு எதிர்கொள்ளப்போகும் கடினமான மூன்று வாரகாலத்திலேயே இப்போது நாம் பயணித்துக்கொண்டுள்ளோம். அடுத்த குறுகிய காலத்திற்குள் நெருக்கடி நிலைமைகள் குறையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

தொடர்ச்சி P2

# மாணவிகள் மீது பாலியல் வன்புணர்வு; ஆசிரியருக்கு விளக்கமறியல் நீடிப்பு

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாணவிகள் சிலரை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 28 வயதான ஆசிரியருக்கு எதிரான வழக்கு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் உள்ள பாடசாலையொன்றின் மாணவிகளை, மாணவர்களுடன் காதல் வலையில் விழவைத்து, 6 மாணவர்கள் ஊடாக மாணவிகளின் நிர்வாண மற்றும் பாலியலில் ஈடுபடும் புகைப்படங்களை எடுத்து, அவற்றை மாணவிகளிடம் காண்பித்து அச்சுறுத்தி, பாலியல் துஸ்பிரயோகத்துக்கு ஆசிரியர் உட்படுத்தி உள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் காணொளிதொழில்நுட்பம் ஊடாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் ஆறு மாணவிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தினை தொடர்ந்து ஆறு மாணவிகளும் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதில் இரண்டு மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த வழக்கின் சந்தேக நபரான ஆசிரியருக்கு எதிராக மேலும் இரண்டு வழங்குகளை (பாலியல் குற்றச்சாட்டு) முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த இரண்டு வழக்கின் விசாரணைக்காக, சந்தேக நபரை எதிர்வரும் 07 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் பணித்த நீதவான், ஆசிரியரின் பாலியல் செயற்பாட்டுக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மாணவனுக்கு நேற்று (30) பிணை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பஸ் கட்டணம் 22...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வுக்கேற்ப, இவ்வாண்டு மாத்திரம் நான்கு முறை பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இதுவரையான 7 மாத காலப் பகுதியில் 5 தடவைகள் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, கடந்த நவம்பர் மாதம் முதல் இதுவரையான காலம் வரை 87 சதவீதத்தினால் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 22 ஆவது திருத்தச்...

அத்துடன், நுகர்வோர் விவகார அதிகாரசபை விசேட வர்த்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதற்கமைய, எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் உற்பத்திப் பொருளொன்று குறிப்பிடப்பட்ட சில்லறை விலை, நிறை/ தொகுதி, உற்பத்தியாளர்களின் முகவரி உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்காமல் விற்பனை செய்யவோ அல்லது இருப்பு வைக்கவோ முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

கடந்த மாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐ.எம்.எப் அதிகாரிகள் குழு நேற்று தமது கலந்துரையாடல்களை முடித்துக்கொண்டு அது குறித்த அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. 2022 இல் பொருளாதாரம் கணிசமாக வீழ்ச்சிகாணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் பணவீக்கமும் உயரும். வெளிநாட்டு கையிருப்பு மிக குறைவாக உள்ள காரணத்தினால் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமையும் ஏற்படும். விஜயத்தின் போதும் தற்போது பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நிலைமைகளை அவதானிக்க முடிந்துள்ளது . ஐ.எம்.எப் கொள்கைகளுக்கு அமைவாக இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

மேலும், பாரிய பொருளாதார மற்றும் கட்டமைப்பு சார் கொள்கை திட்டத்தை வகுப்பதில், இலங்கை கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் மட்டத்திலான உடன்பாட்டை எட்டுவதற்கான நோக்கத்துடன் அடுத்தகட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும். பொதுக்கடன் தன்மையானது ஸ்திரமற்றதாக காணப்படுகின்ற காரணத்தினால், நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலுக்காக இலங்கையின் கடனாளிகளிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான போதுமான நிதி உத்தரவாதங்கள் தேவைப்படும். அதேபோல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கும், கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும், இலங்கையின் வளர்ச்சி திறனை உணர்ந்து கொள்வதற்கும் விரிவான பொருளாதார வேலைத்திட்டத்தை வடிவமைப்பது குறித்து இந்த பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு போதுமான பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட நோக்கங்களை அடைய, தூரநோக்கு வரிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும். பணவீக்கத்தின் அளவைக் கட்டுப்படுத்துதல், கடுமையான கட்டணச் சமநிலை அழுத்தங்களை நிவர்த்தி செய்தல், ஊழல் செயற்பாடுகளை குறைத்தல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் சீர்திருத்தங்களைத் ஆரம்பித்தல் ஆகியவை மேற்கொள்ள வேண்டிய ஏனைய சவால்களாகும். அதிகாரிகள் தங்கள் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை வகுப்பதில் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளனர், அவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். அதேபோல் தொடர்ச்சியாக இலங்கை மக்களுக்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுக்கும் விதமாக எமது கலந்துரையாடல்களை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.

# 14 நாள்களில் சுகாதாரம் முற்றாக...

குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். சுகாதார கட்டமைப்பு வீழ்ச்சியடையாது கொண்டு செல்ல வேண்டுமானால் சுகாதார தரப்பினருக்கான எரிபொருளை பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல் அடுத்த இரண்டு வாரங்களில் சுகாதார கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடையும் என்ற காரணிகளை இவர்கள் பிரதமரிடத்தில் முன்வைத்துள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்டுள்ள எரிபொருளை முக்கியமான துறைகளுக்கு வழங்க வேண்டும், இல்லையேல் அடுத்த இரண்டு வாரங்களில் வைத்திய கட்டமைப்பும் வீழ்ச்சியடையும் நிலையே காணப்படுகின்றது. அவ்வாறு நடந்தால் இறுதியாக மக்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும். இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறாது இருக்க முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய விடயங்களை அரசாங்கம் கருத்தில் கொண்டு அதற்கமைய செயற்பட வேண்டும் என்ற காரணிகளையும் முன்வைத்ததாக சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும், சர்வதேச நாடுகளிடம் இருந்து அத்தியாவசிய மருந்துக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதமரிடத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயங்கள் குறித்து தாம் கூடிய கவனம் செலுத்துவதாக பிரதமர் வாக்குறுதியளித்ததாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# சர்வகட்சி அரசாங்கமே அத்தியாவசியமானது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரையில் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. எனவே, அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். நாளையே அவரால் பதவி விலக முடியாது என்றால், பதவி விலகுவதாக தொடர்பான திகதியை அறிவித்து விட்டு சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைக்க வழிவிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆறு மாதங்களுக்கு நாட்டை கொண்டு செல்வதற்கு சுமார் 4 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது. இதனை எமது நட்பு நாடுகளிடம் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.எனினும், நட்பு நாடுகள் இலங்கைக்கு கடனாக நிதி உதவிகளை வழங்காது. இராஜதந்திர ரீதியாகவே இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கூறினார்.

இது உண்மையில் எமது நாட்டுக்கு வெட்கக்கேடான விடயம். எனினும், இவ்வாறான உதவிகளைப் பெற்றே மேற்குறிப்பிட்ட நான்கு பில்லியனை திரட்டிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## ஐ.எம்.எப் பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கை கைச்சாத்திட சாத்தியம்

கடனாக அன்றி கையிருப்பாக அந்த நிதி வைப்புச் செய்யப்படவுள்ளதோடு இதன் மூலம் வெளிநாட்டு கையிருப்பை சற்று பலப்படுத்திக்கொள்ள முடிவதுடன், ஏனைய நாடுகளுடன் நிதி அல்லது பொருட்கள் ரீதியிலான கடன்களை பெற்றுக்கொள்ள எதுவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக வங்கியுடன் லிட்ரோ கைச்சாத்து

இவ்வாறு பெறப்படவுள்ள 100,000 மெட்ரிக் தொன் எரிவாயுவின் மொத்த பெறுமதி 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், உலக வங்கியினால் 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதுடன், 20 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை லிட்ரோ நிறுவனமே வழங்கும் எனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த எரிவாயு கையிருப்பு சுமார் நான்கு மாத காலத்திற்கு நாட்டின் பாவனைக்கு போதுமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது. எரிவாயு கையிருப்பில் 70% வீட்டுப்பாவனை நுகர்வுக்காக வழங்கப்படும் எனவும், இதில் 12.5 கிலோ கொண்ட 5 மில்லியன் கொள்கலன்களும், 5 கிலோ எடைகொண்ட ஒரு மில்லியன் கொள்கலன்கள் மற்றும் 2.3 கிலோ கொண்ட ஒரு மில்லியன் கொள்கலன்களையும் பெற்றுக் கொள்ள மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன், எஞ்சிய 30% எரிவாயு கையிருப்பு வணிக பயன்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது.

மேலும், 20 மில்லியன் டொலர் செலவில் லிட்ரோ நிறுவனத்தால் பெறப்பட்ட 33,000 மெட்ரிக் தொன் எரிவாயுவின் முதல் தொகுதி ஜூலை முதல் வாரத்தில் இலங்கையை வந்தடையும் என்றும், அதன் பின்னர் அவற்றை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசாங்கத்தை கைப்பற்ற தயாராக உள்ளோம்



கொள்கையுடன் பிணைக்கப்பட்ட அரசியலால் ஒரு நாடு முகங்கொடுக்கக்கூடிய அனைத்து அழிவுகளும் ஒரே நேரத்தில் ஏற்பட்டுள்ளது. இந்த அழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்ற அரசாங்கம் என்ன முடிவுகளை எடுத்தது? ரணில் விக்கிரமசிங்கவிற்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதாகவும், வெள்ளையர்களை அவருக்கு தெரியும் என்பதால் டொலர்களை கொண்டு வர முடியும் எனவும் தெரிவித்தனர். ஆனால் ரணில் அதிகாரத்திற்கு வந்தவுடன் ராஜபக்ஷர்களையே காப்பாற்றினார்.


மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. மக்கள் பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை, பொதுச் சொத்துக்களை ஒரு மோசடி கும்பல் சூறையாடியதால் விவசாயம் அழிந்து விட்டது. எனவே, கொள்ளையடிக்கப்பட்ட பொதுச் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்ய வேண்டும். இதை வெறுமனே அரசா ங்கத்தை கவிழ்ப்ப தன் மூலம் செய்ய முடியாது. இந்த நாட்டில் அழிவை ஏற்படுத்திய ஊழல்வாதிகள் மற்றும் ஊழல்வாதிகளை தண்டித்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை மீளப்பெறும் நோக்கில் மக்கள் வீதியில் இறங்க வேண்டும்.

# அது நான் இல்லை

தொடர்பும் இல்லை என்றும், தன்னைப் போன்ற பெயரில் வேறு சிலரும் இருக்கலாம், ஆனால் அது கண்டிப்பாக தான் இல்லை என்றும் அவர் கூறுகிறார்.

இந்த நிறுவனத்திடம் இருந்து கடன் அடிப்படையில் எரிபொருளைப் பெறுவதற்கு இலங்கை தயாராக இருப்பதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அதில் நாமல் ராஜபக்ஷ தொடர்புபட்டுள்ளதாக விமர்சிக்கப்பட்டதை அடுத்தே அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

# கட்டார் தொண்டு நிறுவனம் மீதான தடை நீக்கம்



கலந்துரையாடப்பட்டது”

இலங்கை அதிகாரிகள் ‘கட்டார் அறக்கட்டளை’ ஒரு பயங்கரவாத நிறுவனம் என்று பெயரிட்டனர் மற்றும் வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் முக்கிய வழக்கு தொடர்பாக பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதாக தொண்டு நிறுவனம் மீது குற்றஞ்சாட்டப்படடிருந்தது.

2019 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட, அந்த தொண்டு நிறுவன நிதியின் மீதான தடையை நீக்குவதற்கான தீர்மானத்தை சட்டமா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது என அறியமுடிகின்றது.

# நாங்கள் காத்திருக்கின்றோம்...

அவ்வாறான திருட்டு செயற்பாடுகளுக்கு இந்த ஓட்டோவையே ஒரு குழு பயன்படுத்தியுள்ளது. அந்த ஓட்டோவின் ஊடாக, 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான டீசல் திருடப்பட்டுள்து.

அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், ஓட்டோவை தடுத்து நிறுத்தியதும். அதிலிருந்தவர்கள் தப்பியோடிவிட்டனர்.

எனினும், ஓட்டோவின் உரிமையாளர் அல்லது சாரதி, தனது வாகனத்தை தேடிக்கொண்டு வரும் வரையிலும் நாங்கள் காத்திருக்கின்றோம் என ஒபேசேகரபுரத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மாணவிகள் மீது பாலியல்...

சந்தேக நபரை எதிர்வரும் 07 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் பணித்த நீதவான், ஆசிரியரின் பாலியல் செயற்பாட்டுக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மாணவனுக்கு நேற்று (30) பிணை வழங்கப்பட்டது. சந்தேக நபரான ஆசிரியருக்கு எதிரான முதல் வழக்கு, விசாரணைக்காக எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குறுகிய காலத்திற்குள் நெருக்கடி நிலைமைகள் குறையும்

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலைமையிலும், விரைவாக எரிபொருளை பெற்றுக்கொள்வது குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம், அதேபோல் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள் காரணமாக எம்மாலும் துரிதமாக செயற்பட முடியாதுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். தற்போது இலங்கையில் 11,000 மெற்றிக் தொன் டீசல், 7,000 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 30,000 மெற்றிக் தொன் ஏனைய எரிபொருள் எண்ணெய் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# பிச்சை எடுத்து உண்ணும் நிலையில் நாடு

திருடர்களான இந்த ஆட்சியாளர்களோடு எந்த விதமான டீலும் அரசியலும் தமக்கு இல்லை என தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிச்சை எடுத்து உண்ணும் நிலைக்கு நாடு வந்துவிட்டதாவும் கூறினார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், நாட்டின் தேசிய பாதுகாப்பை முற்றாக ஒழித்து விட்டது. இராணுவத்தின் ஆட்சியையே இவர்கள் தேசிய பாதுகாப்பாக கருதினார்கள். தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட காரணிகளான பொருளாதார, கல்வி, சுகாதாரம், விவசாயம் ஆகிய துறைகளை தேசிய பாதுகாப்பாக இவர்கள்

32 இலட்சம் குடும்பங்களுக்கு

# ஆறு மாதங்களுக்கு ரூ.7,500 வழங்கப்படும்



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில், பொருளாதார ரீதியாக கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள 32 லட்சம் குடும்பங்களுக்கு ஜூலை மாதம் முதல் 7,500 ரூபாவை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (30) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்த திட்டம் செயற்படுத்தப்படும எனவும், இவ்விரு வங்கிகளும் தலா 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்த திட்டத்திற்காக திட்டத்திற்காக வழங்கியுள்ளன. நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி பெறுவோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் ரூ.7,500 ஆக அதிகரிக்கப்படும் என்றும், நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவு கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விவசாயிகளுக்கு உரம் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த சில வாரங்களாக அரசாங்கம் உரங்களை கொள்வனவு செய்து வருகிறது என்றார்.



# இலங்கை-சீன வர்த்தக ஒத்துழைப்பு வலுப்பெற கலந்துரையாடல்

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹோங் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும், இலங்கையில் சீன முதலீட்டின் கீழ் அபிவிருத்தி திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# புலம்பெயர் தமிழர்களின் கையிலேயே விடிவு உள்ளது

## நோர்வேயில் வைத்து தெரிவித்தார் சாணக்கியன்

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் வெட்கமில்லை; இன்றும் பதவியில் உள்ளார்கள். இலங்கையின் தற்போதைய நிலைமை வேதனைக்குரியதாகவுள்ளது. இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரால் மேம்படுத்த முடியும். ஜனாதிபதி உட்பட பிரதமர் பதவி விலக வேண்டும். இல்லாவிடின் தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வையே கோருகிறோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஒஸ்லோவில் உள்ள இலங்கையர்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது



அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

தற்போது இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்க்கொண்டுள்ளது. அதிகாரிகளும் பொது மக்களும் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தால் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

அதனை தொடர்ந்து 30 வருடகால சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது. கடன் பெற்று யுத்தத்துக்கு அதிக நிதி செலவிடப்பட்டது. 2009ஆம் ஆண்டு காலத்துக்குப் பிறகு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக 'கோ ஹோம் கோட்டா', 'நோ டீல் கம' என குறிப்பிட நேரிட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு வெட்கமில்லை; இன்றும் பதவியில் இருக்கிறார்.

73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள். ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும். பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால் 13 இலட்சம் புலம் பெயர் தமிழர்களின் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது. இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளமையினை காண்கையில் வேதனையடைகிறோம். ஜனாதிபதி, பிரதமருக்கு மக்களின் நிலை தொடர்பில் அக்கறையில்லை.

இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பால் முடியும். இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் வடக்கு- கிழக்கு மக்கள் மீதும் செல்வாக்கு செலுத்தும். ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். பிளவுப்படாத இலங்கைக்குள் தீர்வினையே கோருகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்



உலக வங்கி ஒதுக்கும் கடன் உதவிகளை

# வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்

உலக வங்கி ஒதுக்கும் கடன் உதவிகளை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை உலக வங்கியின் பிரதிநிதிகளிடத்தில் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துக்கு பெற்றுக்கொள்ளக்கக்கூடிய வகையில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் அந்தக் கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

வரி உயர்வு, டீசல், மண்ணெண்ணெய் மானியம் நீக்கம் ஆகியவை கடற்றொழில் உள்ளிட்ட பல தரப்பினருக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆபத்தில் உள்ள மற்ற குழுக்கள் குறித்தும் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வரும்போது இந்த விடயங்கள் குறித்து பரிசீலிக்கப்பட நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்று முன்தினம் (29) பிற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இந்திய–இலங்கை வாணிப

# இருதரப்பு வர்த்தகம் மேம்பட ஆராய்வு

வர்த்தக,வாணிப மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். வர்த்தக நடவடிக்கைகளை அதிகரித்தல், இந்திய-இலங்கை வாணிப தொடர்பிற்கான வழிகளை உருவாக்குதல் போன்ற இருதரப்பு வர்த்தகம் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

3 நாள்கள் மட்டுமே

# கொன்சியூலர் சேவைகள்

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு, நேற்று ( 30 ) முதல் ஜூலை 10 வரை திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் மட்டுமே பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும். இதே வேலை ஏற்பாடுகள் யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை, குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களுக்கும் பொருந்தும் என்பதுடன், அந்த அலுவலகங்களும் இந்த நாள்களிலேயே சேவைகளை வழங்கும்.

அவசர விசாரணைகளுக்காக பின்வரும் மின்னஞ்சல் முகவரிகளினூடாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கொன்சியூலர் விவகாரப் பிரிவு - கொழும்பு - consular@mfa.gov.lk, பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - யாழ்ப்பாணம் - jaffna.consular@mfa.gov.lk,

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - மாத்தறை - matara.consular@mfa.gov.lk, கண்டி - kandy.consular@mfa.gov.lk, திருகோணமலை - trincomalee.consular@mfa.gov.lk, குருநாகல் - kurunegala.consular@mfa.gov.lk

# தினக்குரல் செய்தி ஆசிரியரின் தந்தை காலமானார்



தினக்குரல் செய்தி ஆசிரியர் சிவகணேசனின் அன்புத் தந்தையான கந்தையா தம்பிராசா (Rtd Investigation Inspecor-Postal Department ) நேற்று (30) வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அமரர் விசாலாட்சியின் அன்புக்கணவரும் சிவகுமாரன் (தமிழருவி சிவகுமாரன்), சிவபாலன் (ஆசிரியர்), சிவகணேசன் (செய்தி ஆசிரியர்-தினக்குரல்),சிவராணி (விரிவுரையாளர் -யாழ் பல்கலைக்கழகம்), சிவசோதி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இல. 78, இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (01) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

# அடுத்த வாரம் 3 நாள் அமர்வு



பாராளுமன்றம் அடுத்த வாரம் 4,5,6ம் திகதிகளில் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் 6ஆம் திகதி நடைபெறும்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (30) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

பல்வேறு காரணங்களுக்காக பாராளுமன்றத்தில் கேட்கப்படாத 50 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் 4ஆம் திகதி மு.ப 10 மணி முதல் பி.ப 3.30 மணி வரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூலை 6ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் மு.ப 10.30 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எதிர்க்கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் பி.ப 4.30 மணி வரை நடைபெறவிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போது நிலவும் சிரமங்கள் காரணமாக பாராளுமன்றம் கூடாத நாள்களில் குழுக் கூட்டங்களை ஒன்லைன் மூலம் நடத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே 9 போராட்டத்துக்கு துறைமுக ஊழியர்கள் ஆதரவால்

# ரூ.12 கோடி நட்டம்



நாட்டின் நெருக்கடி நிலைமைகளை அடுத்து அரசாங்கத்தை எதிர்த்து மே 9ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு துறைமுக ஊழியர்கள் ஆதரவு வழங்கியதன் காரணமாக அன்றைய தினம் 12 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர், கொழும்பு துறைமுகத்திற்கு வந்த 17 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டதால் இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். இலங்கைக்கு வரவேண்டிய அந்தக் கப்பல்கள் சிங்கப்பூருக்குச் சென்றதாகவும், அவை கொழும்புத் துறைமுகத்துக்குத் திரும்பப் போவதில்லை. விமான நிலைய ஊழியர்கள் இவ்வாறான தீர்மானங்களை எடுத்தால், இலங்கைக்கு வரும் விமானங்கள் வேறு நிறுத்தங்களுக்கு திருப்பி விடப்படும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், அரசியல் கண்ணோட்டத்தில் தொழில் பார்த்தால், அதில் தாக்கத்தை செலுத்தும் என்பதை சிந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கத்துக்குப் பின்

# மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும்

## உலக வங்கியின் இலங்கை பணிப்பாளர் தெரிவிப்பு



உலக வங்கியின் உதவியுடன் இலங்கையில் தற்போது 17 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்வதற்காக நிதி உதவி வழங்கக்கூடிய வகையில் அந்தத் திட்டங்கள் மீள்வடிவமைக்கப்படும் என்று உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஃபாரிஸ் ஹடாட்-செர்வோஸ் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டிய பிறகு, உலக வங்கியின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக சர்வோஸ் குறிப்பிட்டார்.

வீட்டு எரிவாயு, உரங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஏற்கெனவே தீர்மானித்துள்ளதாக உலக வங்கியின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் சியோ கந்தா, சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி அசேல திஸாநாயக்க, பயிற்சி முகாமையாளர் கேபி ஜோர்ஜ், அஃப்ராம் தனியார் துறை நிபுணர் பீட்டர் மௌஸ்லி, நிதி நிபுணர் மிக்கேல் டிக்மன், சிரேஷ்ட பொருளாதார நிபுணர் கிஷான் அபேகுணவர்தன ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனர ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

# உதவி கிடைத்தால் பயனுள்ளதாய் அமையும்

## ஜப்பான் தூதுவர் – அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



வடக்குக்கு மூன்று நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சமகால அரசியல் நிலைவரங்கள், கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள், குறிப்பாக கடலட்டை உற்பத்தி உட்பட நீர்வேளாண்மை எனப்படும் பண்ணை முறையில் ஏற்றுமதித் தரத்திலான கடலுணவுகளை உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஜப்பானிய தூதுவருக்கு தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜப்பானின் உயரிய தொழில்நுட்ப அனுபவங்களும் உதவிகளும் கிடைக்குமாயின், எமது மக்களுக்கு பயனுள்ள வகையில் அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.


## பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் மிகவும் பிரபல்ய கேந்திர நிலையமானஹட்டன், டிக்கோயா, காசல்ரீ நீர்த்தேக்க கரையில் (Castlereagh reservoir) அமைந்துள்ள உயர்தர ஹோட்டல். இந்த ஹோட்டல் அதன் அழகிய இடம்,நேர்த்தி, சௌகரியம் மற்றும் அமைதி ஆகியவற்றிற்காக சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் புகழ்பெற்ற இந்த ஹோட்டலில் கீழ் காணும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்

ஆற்றல்மிக்க, நிபுணத்துவம் வாய்ந்த சுய-உந்துதல் உடைய திறமை மிக்க பணியாளர்களை தேடுகறோம்.

**உதவிப்பணியாளர் (Butler)**

**வேலைக்கான தகுதிகள்**

- ஆங்கிலத்தில் சரளம் (மேலதிக மொழி அறிவு சிறப்பு)
- நீண்ட நேரம் வேலை செய்யும் திறன்
- குறைந்தபட்சம் 3 முதல் 4 ஆண்டுகள் பணி அனுபவம்
- இனிமையாக கையாளும் தன்மை மற்றும் அழுத்த நிலைமைகளை சிறப்பாக சமாளிக்கும் திறன்
- குறைந்தபட்ச மேற்பார்வையுடன் அறிவுறுத்தல்களைப் பின்பற்றும் திறன்

**அறை உதவியாளர்**

**வேலைக்கான தகுதிகள**

- குறைந்தபட்சம் 2-3 வருட முன் அனுபவம்
- வீட்டு பராமரிப்பு தரத்தை உறுதி செய்வதற்கான பொறுப்பு
- ஹோட்டலின் விருந்தினர் மற்றும் பொது இடங்களின் தூய்மையை பராமரித்தல்.
- சிறந்த தகவல் தொடர்பு மற்றும் மொழியில் தேர்ச்சி (ஆங்கிலம், சிங்களம், தமிழ்)
- அவசியம் இருப்பின் பணி நேரங்களில் நெகிழ்ச்சித்தன்மை,

இந்த சவாலான பாத்திரத்தில் நீங்கள்வெற்றிபெற நினைத்தால், நாங்கள் தேடும்சரியான விண்ணப்பதாரி நீங்கள் தான் என்று உணர்ந்தால், உங்கள் சயவிபரக்கோவையை உறவு முறையற்ற இரு நபர்களின் விபரங்களுடன் 10 நாட்களுக்குள் மின்னஞ்சல் செய்யவும் hr@groupofasset.com

மின்னஞ்சலின் தலைப்பில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்

**மேலதிக விபரங்களுக்கு: 0772 609084**

# விழிப்பாக இருங்கள்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட், நேற்று (30) தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, மக்கள் மத்தியில் தற்போது சைக்கிளின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

வீதியோரங்களில், பொது இடங்கள், வியாபார நிலையங்களில் நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள்களை அதன் உரிமையாளர்கள் பாதுகாப்பான முறையில் வைக்குமாறு கேட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாக பொலிஸ் நிலையத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சைக்கிள் காணாமல் போனால் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் திருடனை உடனடியாக கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# “பொறுமை காக்கேன்”

## வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

■ நிதர்ஷன் வினோத்

பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் வடக்கு மாகாண அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களத் தலைவர்களிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கை தொடர்பில், இதுவரை தீர்வுகளை முன்வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இனியும் பொறுமை காக்க மாட்டேன் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எச்சரித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் சேவையை அமைச்சுகள், திணைக்களங்கள் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டு ஆளுநரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சுகள், திணைக்களங்களில் பொதுமக்கள் தமது தேவையைத் திருப்திகரமாக பெற்றுக் கொள்ளாமை, அமைச்சுகள், திணைக்களங்களில் இடம்பெற்ற முறைகேடான செயற்பாடுகள் தொடர்பிலும் பல முறைப்பாடுகள் நேரடியாக கிடைக்கப்பெற்றன.

அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிலவற்றுக்கு இதுவரை அமைச்சுகள், திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்காமை தொடரில் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக முறைப்பாடு வழங்கும் நபர் ஒருவருக்கு உரிய காலப் பகுதியில் தீர்வை முன்வைக்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

அரச நிர்வாகம் பொது மக்களின் தேவைகளை இலகுபடுத்துவதற்காக கட்டியமைக்கப்பட்ட ஸ்தாபன அமைப்பாக காணப்படுகின்ற நிலையில், அதன் ஊடாக பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போதே குறித்த ஸ்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்றதாக அமையும்.



வட மாகாணத்தில் செயற்பாடின்றி மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் எந்த ஒரு நிர்வாக கட்டமைப்பையும் ஆளுநர் என்ற நீதியில் அனுமதிக்கப் போவதில்லை.

ஆகவே, வடக்கு மாகாணத்தில் இதுவரை அமைச்சுகள், திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு முன் வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் என ஆளுநர் எச்சரிக்கை விடுத்தார்.

# பதுக்கிய பெற்றோல் பற்றியதில் எரிந்த பெண்



■ பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை, அன்புவெளிபுரத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 47 வயதான பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் புதன்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினமன்று, வீட்டின் சுவாமி அறையில் விளக்கேற்றி விட்டு வீசிய தீக்குச்சி, சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோல் கொள்கலனில் விழுந்து தீ ஏற்பட்டதாலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# பெற்றோலுடன் ஒருவர் கைது



■ கனகராசா சரவணன்

அக்கரைப்பற்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் வீடு ஒன்றை நேற்று முன்தினம் (29) முற்றுகையிட்ட போது, அங்கு சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த 35 லீற்றர் பெற்றோலுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உளவுத்துறைக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய, அக்கரைப்பற்று பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார், சம்பவதினமான பிற்பகல் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர். இதன் போது அங்கு பதுக்கி வைத்திருந்த 35 லீற்றர் பெற்றோலை மீட்டதுடன் ஒருவரை கைது செய்தனர்.

மேலும், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### கிழக்கு மாகாணத்தில்

# வாரத்தில் 3 நாள்கள் பாடசாலை இயங்கும்

■ சகா

சமகால எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினை காரணமாக கிழக்கு மாகாணத்தில் அடுத்த வாரம் முதல் மூன்று தினங்களுக்கு பாடசாலைகளை நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டு உள்ளது.



செவ்வாய், புதன், வியாழக்கிழமை ஆகிய மூன்று நாள்களும் பாடசாலைகள் வழமை போல் நடைபெறும். இதற்கான ஆலோசனையை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் முன்வைத்துள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உடனான சூம் தொழில்நுட்ப கூட்டத்தில் ஆளுநர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அந்தந்த வலய கல்வி பணிப்பாளர்கள் அவரவரின் கீழிருக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் ஊடாக அதிபர், ஆசிரியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

செவ்வாய், புதன், வியாழக்கிழமை நாள்களில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் முழுமையாக வரவழைத்து, மாணவர்களுக்கு முழு நேரசூசி வழங்கி, முழு அளவிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில பிழையான வழிநடத்தல்களை முன்னெடுக்க திட்டமிட்டு இருக்கின்றன. அதனை பொருட்படுத்தாமல் அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த விடயத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

முடியுமானால் மூன்று மாவட்ட அரசாங்க அதிபர் உடன் பேசி, எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். போக்குவரத்து பிரச்சினை உள்ள பாடசாலைகளுக்கு பொது போக்குவரத்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

வருகின்ற ஜூலை மாதம் திங்கட்கிழமை 4 ஆம் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமை 8 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த மூன்று நாள் பாடசாலை இடம்பெறும். மேலும், அதன் பின்னர் எவ்வாறு பாடசாலையை நடத்துவது என்பது தொடர்பில் பின்னர் விரிவாக அறிவிக்கப்படுமென அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

# மாஸ்டர் சிவலிங்கத்தின் சிலை திறந்து வைப்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர் கலாபூசணம் கதைமாமணி மறைந்த மாஸ்டர் சிவலிங்கத்திற்கு மட்டக்களப்பில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்னால் சிலை நிறுவப்பட்டு, நேற்று (30) காலை திறந்து வைக்கப்பட்டது.

கல்லடி சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர்களான சிவானந்தியன் சகபாடிகள் அமைப்பால் நிறுவப்பட்ட குறித்த சிலையை, மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்துவைத்தார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.சீ.ஜவாஹிர் உட்பட



பெருமளவிலான பிரமுகர்கள், கலைஞர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

புகழ் பெற்ற மாஸ்டர் சிவலிங்கம், மாணவர்களுக்கு கதை சொல்வதனூடாக சிறந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பியவர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களிலும் தொடர்ந்து சிறுவர் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நோயாளர் காவுவதை தடுக்கும் சுப்பர் டீசல்

மத்திய சுகாதார அமைச்சால் 46 பென்ஸ் மற்றும் போட் ரக நோயாளர் காவு வண்டிகள் வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் படி சுப்பர் டீசல் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவற்றிற்கான சுப்பர் டீசலைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை சுகாதார திணைக்களம் எதிர்கொண்டுள்ளது.

இதனால் சில மாவட்டங்களில் குறித்த நோயாளர் காவுவண்டிகள் தற்காலிகமாக பாவனையில் இருந்து விலக்கப்பட்ட நிலையில் இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார பணிப்பாளர் தமது மாவட்ட அரச அதிபர் ஊடாக சுப்பர்



டீசலைப் பெறுவதற்கு விசேட பொறிமுறையினை ஏற்படுத்தியுள்ளார். அதனால் முல்லைத்தீவில் சுப்பர் டீசலில் இயங்கும் நோயாளர் காவு வண்டிகள் தொடர்ந்து பாவனையில் உள்ளன.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பிரிவினர் சுப்பர் டீசலில் இயக்க வேண்டிய நோயாளர் காவு வண்டிகளை சாதாரண டீசலில் இயக்கும் முடிவினை தன்னிச்சையாக எடுத்துள்ளனர். இதனால் குறித்த நோயாளர் காவு வண்டிகளின் நீடித்த இயங்கு நிலை பாதிக்கப்படும் சூழ் நிலை உருவாகியுள்ளது.

இதனால் பெறுமதிவாய்ந்த நோயாளர் காவுவண்டிகள் செயலிழக்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதாரப் பணியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# அமெரிக்காவுக்கு பறக்கும் தமிழ் எம்.பிக்கள்

■ ரொசேரியன் லெம்பர்ட்




வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை 35 வது ஆண்டாக நடத்தும் ‘மாபெரும் பேரவை தமிழ் விழாவில்’ பங்கேற்பதற்காக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வியாழக்கிழமை (30) அமெரிக்கா பயணமானார்.

நியூயோர்க்கில் இந்நிகழ்வு 1 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பயணத்தில் அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுடன் ‘தமிழர் தரப்பு நிலைப்பாடு’ தொடர்பாக கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு அமெரிக்க வாழ் தமிழ் அமைப்புகள் பலரோடும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் குறித்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, குடியிருப்பு குளத்துக்கு அருகாமையில் உள்ள பொதுச் சந்தைக்கு பின் பகுதியில் இருந்து, மூன்று பிள்ளைகளின் தந்தையான மூக்கன் சஜீவன் (வயது 38) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னரே மேலதிக விடயங்களை தெரிவிக்க



முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் சனிக்கிழமை (25) காலை வீட்டிலிருந்து சென்று காணாமல் போயிருந்தார். அதுதொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# நான்கு தமிழர்கள் அகதிகளாயினர்

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக, வவுனியா மாவட்டத்தில் இருந்து நான்கு பேர், அகதிகளாக தனுஷ்கோடியை நேற்றுக்காலை சென்றடைந்துள்ளனர்.

இவர்களை மீட்ட கரையோர பொலிஸார் இராமேஸ்வரம் கரையோர காவல் நிலையத்துக்குக் அழைத்துச் சென்றுள்ளனர். விசாரணைக்குப் பின்னர், மண்டபம் அகதிகள் முகாமில்



தங்க வைக்கப்பட உள்ளனர்.

இவர்கள், வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வந்து, மன்னாரில் இருந்தே படகு மூலம் தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளதாக தெரிவித்தனர்.



# IOCக்கு முன்னால் குவிந்த மக்கள்

■ ரொசேரியன் லெம்பர்ட்

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில், இராணுவம் மற்றும் கடற்படையின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலக பணியாளர்களின் மேற்பார்வையில் நேற்றுக்காலை (30) பெற்றோல் வழங்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளுக்கு 1,500 ரூபாவுக்கும், ஓட்டோவுக்கு 2,000 ரூபாவிற்கும், கார் உட்பட ஏனைய பெற்றோல் வாகனங்களுக்கு 2,500 ரூபாவுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வரிசையில் நின்று அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின்

# 130ஆவது ஸ்தாபகர் தினம்

மலையக கல்வி சாதனைக்கு பெருமை சேர்க்கும் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் 130ஆவது ஸ்தாபகர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஆர்.ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் இராஜலெட்சுமி சேனாதிராஜா பிரதம அதிதியாகவும் பாடசாலை பழைய மாணவரும், விசேட பல் மருத்துவருமான ஏ.சுந்தர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

(எஸ். கணேசன்)

















சர்ச்சைக்குரிய கொங்கோடியா தோட்டக் காணி

# தோட்ட நிர்வாகம் கையளித்துள்ளது

**தவிசாளர் வேலு யோகராஜ் தகவல்**

ஆ.ரமேஸ்

கந்தப்பளை நகரில் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் கொங்கோடியா தோட்டத்திற்கு சொந்தமான 80 பேர்ச் காணியை நுவரெலியா பிரதேச சபைக்கு தோட்ட நிர்வாகம் உத்தியோகப்பூர்வமாக நேற்று முன்தினம் (29) கையளித்துள்ளது.

குறித்த காணியை, நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் கையகப்படுத்தி, மோசடி செய்தார் எனத் தகவல்கள் வெளிவந்த நிலையில், இக் காணிக்குரிய 32 இலட்சத்து 36 ஆயிரத்து 554 ரூபாய் 74 சதத்தை காசோலை மூலம் செலுத்தி, டப்புஸ்ஸலாவை பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் கொங்கோடியா தோட்ட காணியை, நுவரெலியா பிரதேச சபை கையேற்றுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தையும் தோட்ட நிர்வாகம் நுவரெலியா பிரதேச சபைக்கு வழங்கியுள்ளதாக தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.



வெல்லவாய வைத்தியசாலையின்

# அம்பியூலன்ஸ் சேவைகள் முடங்கின

சுமணசிறி குணதிலக

எரிபொருள் தட்டுபாடு காரணமாக, வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் சேவைகளும் முடங்கியுள்ளன.

“வைத்தியசாலையில் 3 அம்பியூலன்ஸ் வண்டிகள் காணப்படுவதாகவும் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில், மேலதிக சிகிச்சைக்காக ஏனைய வைத்தியசாலைகளுக்கு அனுப்ப வேண்டிய நோயாளர்களை அனுப்பிவைக்க முடியாத




நிலை ஏற்பட்டுள்ளது எனவும் வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அநுராத ரணதேவ தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறை அத்தியாவசிய சேவையாக காணப்பட்ட போதிலும் தமது வைத்தியசாலையிலுள்ள அம்பியூலன்ஸ் வண்டிகளுக்கு எரிபொருள் கிடைக்கவில்லை. இதனால் வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களை மொனராகலை, பதுளை ஆகிய பொது வைத்தியசாலைகளுக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

டயகமவிலிருந்து இரண்டு பிரதான நகரங்களுக்கான

# பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கவும்

**பிரதேசவாசிகள் கோரிக்கை**

துவாரகஷன்

டயகம நகரத்திலிருந்து ஒவ்வொரு நாளும் அதிகாலை 5 மணிக்கு கண்டி செல்லும் பஸ் வண்டியும் காலை 10.30 மணிக்கு நுவரெலியா செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் கடந்த சில நாள்களாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த பஸ்களில் அதிகமானோர் கண்டி,பேராதனை, நாவலப்பிட்டி ஆகிய பிரதான வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைப் பார்ப்பதற்கும் தங்களின் சிகிச்சைகளுக்கும் செல்வதுடன், பாடசாலை மாணவர்கள், ஏனைய கடமைகளுக்கு செல்பவர்களும் இந்த பஸ் சேவையால் பயனடைந்தனர்.

இந்த நிலையில், தற்போது பஸ் சேவை இன்மையால் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் இப்பிரதேச மக்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன், டயகம நகரிலிருந்து மெராயா குறுக்கு வீதியின் ஊடாக நுவரெலியா சென்ற பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் பாரிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், 5,000 ரூபாய் வரை ஒட்டோக்களுக்கு செலுத்தி நுவரெலியா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள் அரசு பஸ்களை சரியாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு கூடிய அக்கறை செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும். எனவே, குறித்த பஸ்களை, உடனடியாக சேவையில், ஈடுபடுத்த அனைத்து தரப்பினரும் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பதுளை வைத்தியர்களின்

# முன்மாதிரியான செயற்பாடு

பாலித ஆரியவன்ஸ

போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பு, எரிபொருள் இன்மை உள்ளிட்ட காரணங்களால் பிரத்தியேக வாகனங்களைப் பயன்படுத்துபவர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் பலர் மாற்று வழிகளை போக்குவரத்துக்காக நாடும் நிலைக்குச் சென்றுள்ள நிலையில், பதுளை பொது வைத்தியசாலையின் சிறுவர், புற்றுநோய், மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் சைக்கிளில் தமது கடமைகளுக்கு



வரத் தொடங்கியுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையின் மேலும் பல வைத்தியர்கள் கால்நடையாகவும் தமது பணிகளுக்கு சமூகமளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தேயிலை மலைத் தோட்ட கோவிலின்

# உண்டியலிலுள்ள பணம் திருட்டு

ஆ.ரமேஸ்

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பார்க், தேயிலை மலை தோட்டத்தில் உள்ள ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோவிலை உடைத்து, இரண்டு உண்டியல்களை கொள்ளையடித்த சம்பவமொன்று, நேற்று முன்தினம் (29) இரவு இடம்பெற்றுள்ளது.

கோவிலின் வெளிப்புற கண்ணாடி ஜன்னலை உடைத்து, உள்ளே நுழைந்துள்ள திருடர்கள், அங்கிருந்த உண்டியலை வெளியில் கொண்டு வந்து உடைத்து, பணத்தை கொள்ளையடித்து உள்ளதுடன், உண்டியலை கோவில் வளாக பகுதியில் வீசியெறிந்து சென்றுள்ளனர்.

அத்துடன் ஒலிபெருக்கி பெட்டி இரண்டும் இதன்போது கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (29) மாலை



ஆறுமணி பூசை வழமைப்போல் இடம்பெற்றுள்ளதுடன், பூஜை முடிந்த பின்னர் பூசகர் கோவில் கதவுகளை பூட்டி சென்றுள்ளார்.

நேற்று (30) காலை ஆறு மணி பூஜைக்காக பூசகர் வந்த போதே, உண்டியல் பூட்டு உடைக்கப்பட்டு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

உடனே, சம்பவம் தொடர்பில் கோவில் நிர்வாகத்துக்கும்,பொது மக்களுக்கும் அறிவித்ததை தொடர்ந்து கந்தப்பளை பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கந்தப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வைத்தியரின் வாகனத்தில்

# எரிபொருள் திருடியவர் கைது

சேஹ்ன் செனவிரத்ன

கண்டி தேசிய வைத்தியசாலை வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைத்தியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலிருந்து எரிபொருளைத் திருடிய ஒருவர் வைத்தியசாலை காவலர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் குறித்த வைத்தியர் மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு வருவதுடன் அன்றும் வழமை போல 28ஆம் இலக்க வார்டுக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்தியசாலைக்குள் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேகநபர் போத்தல் ஒன்றில் மோட்டார் சைக்கிளிலிருந்த எரிபொருளை நிரப்பிக்கொண்டிருந்த போது, வைத்தியசாலை காவலர்களிடம் கையும் களவுமாக சிக்கியுள்ளார்.

சந்தேகநபர் கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான எரிபொருள் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# மேசையின் மீது பிளாஸ்டிக் பேசன்



ஷேன் செனவிரத்ன

பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, அண்மையில் திறந்துவைக்கப்பட்ட, கண்டி மாநகர சபையில் கூட்டம் நடத்தும் மண்டபத்தின் கூரை ஒழுகுகிறது. இதனால் உறுப்பினர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

நேற்று (3) பெய்த சிறிய மழையின் போதும் கூரை ஒழுகியது. இதனையடுத்து, சபையின் சேவையாளர்கள், ஒழுகும் நீரை சேமிப்பதற்காக, மேசையின் மீது ப்ளாஸ்டிக் பேசனை வைத்தனர்.



# தீயால் ஆறு கடைகள் சேதம்

ராமு தனராஜா

பதுளை, சிவிலியன மாவத்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீயினால் ஆறு வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் (29) இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது துணி, தேங்காய் எண்ணெய், மரக்கறி, பழக்கடை என்பன தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. பொதுமக்கள் மற்றும் படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையால் பாரிய அசம்பாவிதம் தடுக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றச் சென்று

# ஏமாற்றத்துடன் திரும்பிய கர்ப்பிணிகள்

பி.கேதீஸ்

கொத்மலை பொது சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா வைத்தியசாலையில், 28ஆம் திகதி, குழந்தைக்களுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசி வழங்குவதற்கான திகதி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு குழந்தைகளுடன் வருகைத் தந்திருந்த தாய்மார்கள்கள் மற்றும் கர்ப்பிணிகளும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

# முடிச்சுமாறிகள், கொள்ளையர்கள் குறித்து விழிப்பாய் இருங்கள்

வீட்டுக்குள் இருக்கமுடியாத நிலைமையும் வீட்டிலிருந்து வெளியே செல்லமுடியாத சூழ்நிலையும் நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பேரச்சத்துடன் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு அருகில் இருப்பவர்களை, எந்நேரமும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அந்தளவுக்கு சம்பவங்கள் மலிந்துவிட்டன. கருவாடு கொள்வனவு செய்வதைப் போல, பெண் வர்த்தகரிடம் கதையளந்த கயவன், அந்தப் பெண்ணின் கழுத்தில் கிடந்த தங்க சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய சம்பவம் தென்னிலங்கையில் இடம்பெற்றுள்ளது.

காதலிப்பதாக நடித்து, பெண்ணின் ஸ்கூட்டியிலிருந்த பெற்றோலை திருடிச் சென்ற சம்பவம் வடக்கில் அரங்கேறியுள்ளது. ஒரு குழுவாய் சென்று, மூவர் காவல்காக்க, ஒருவர் மட்டுமே படலைக்குள் புகுந்து, நிறுத்தியிருந்த வாகனத்தில் எரிபொருள் திருடும் சம்பவம் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

வரிசையில் நிற்கும் வயோதிபர்களிடம் கதையளந்து, தாங்கள் மண்ணெண்ணெய் வாங்கித்தருவதாகக் கூறி, அவர்களை ஓரமாய் இருக்கவிட்டு, கேன்களை வரிசையில் வைத்துவிட்டு, பணத்துடன் தலைமறைவாகிய சம்பங்கள் மலையகத்தில் எண்ணிலடங்காதவை.

இன்னும் எவ்வாறான சம்பவங்கள் இடம்பெறப் போகின்றனவோ என்பதை ஊகிக்க முடியாதுள்ளது. எனினும், கட்டுநாயக்க பிரதான வீதியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்றுள்ள சம்பவம், ஒவ்வொருக்கும் படிப்பினையாகவே இருக்கும். ஏனெனில், பலபேர் பணத்தை மீளப்பெறுவதற்கு தன்னியக்க அட்டைகளையே பயன்படுத்துகின்றனர்.

தன்னியக்க இயந்திரத்தில் பணத்தை மீளப்பெற்று, வெளியேறிய ஒருவரை பின்தொடர்ந்த மற்றுமொருவர், 1,000 ரூபாயைக் கேட்டுள்ளார். கொடுக்க மறுத்ததையடுத்து, கத்தியால் குத்திக்கொன்று விட்டு, பணத்தை எடுத்துக்கொண்டு அந்தநபர் தலைமறைவாகிவிட்டார்.

நாட்டின் நிலைமை இந்தளவுக்குச் சென்றுவிட்டமையால், ஒவ்வொருவரும் மிகக்கவனமாக இருக்க வேண்டும். மின்வெட்டால் பிரதான நகரங்களில் வீடுகளுக்குள் இருக்கமுடியாத நிலைமையும், கொள்ளையர், கள்வர், முடிச்சிமாறிகளால் வீடுகளுக்கு வெளியே செல்லமுடியாத நிலைமையும் எற்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் மின்வெட்டு அமல்படுத்தப்படும் போது, ஒவ்வொருவரும் விழிபாகவே இருக்கவேண்டும். இருளடைந்த குறுக்கு வீதிகளிலும் வீதி மின்விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கும் பிரதான வீதிகளிலும் தன்னந்தனியாக செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமையொன்றே ஏற்பட்டுள்ளது.

பசி, பட்டினி, போஷாக்கான உணவு இன்மை, பணமிருந்தும் தேவையான பொருட்கள் இன்மை, மருந்துகளுக்குத் தட்டுப்பாடு என இன்னோரன்ன பிரச்சினைகளில் எத்தனை பேர் மரணித்துள்ளனர் என்பதை கணக்கிட முடியாது. சில மரணங்களுக்கு காரணங்களை கண்டுப்பிடிக்கவே முடியாது. விரக்தியிலும் பலர் மரணித்துள்ளனர்.

கொன்றுவிட்டு பொருட்களையும் பணத்தையும் கொள்ளையிட்டு தலைமறைவாகிவிடுதல் அரங்கேறுகின்றன. ஆகையால், வீட்டுத்தேவைக்காக பெருந்தொகை பணத்தை, வங்கிகளிலிருந்து மீளப்பெறுவோர், தன்னியக்க இயந்திரங்களை பயன்படுத்தாமல் இருப்பதுடன், தங்களைச் சுற்றியிருப்பவர்கள் தொடர்பில் விழிப்பாக இருப்பதும் அவசியமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எல்லாமே தமக்குச் சாதகமாகவே அமையும் எனும் கற்பனையுடன் காலம் தள்ளும் நபர், தனது செயல்களில் அக்கறையும் காட்டாமல் இருப்பதுண்டு.

வயலில் உழவர்கள் சிரமப்பட்டு உழைப்பதாலேயே நெல் மணிகள் நிரம்பி, அவர் வாழ்வைச் செழிப்பூட்டுகின்றன. முன்னேற்றம் எம் எதிரேதான் உள்ளது.

உடலை வளைக்காமல், எதைத்தான் வெற்றிகரமாகச் செய்ய முடியும்? கற்பனைகளை நிஜமாக உருவாக்குபவனே, வீரம் மிகு சாதனையாளன்.

மனவைராக்கியம் மாபெரும் வீரமாகும். போர் புரிவது மட்டும் வீரம் அல்ல; சரியான முறையில் திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் தோற்றுப்போவதில்லை. எடுத்த எடுப்பில் எல்லாமே நடந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. விருப்பமான வேலையை ஆரம்பிப்பதுடன், தொடர்ந்து உழைப்பதே அனுகூலத்தைத் தரவல்லது.

மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய காலமிது. தேவைகள் அதிகரித்து விட்டன. கடன்படாமல் வாழ்வதே, பெரும் வரவு போலாகிவிட்டது. கலக்கம் வேண்டாம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### வளங்களைத் தொலைக்கும் தேசமும்

# நிலங்களைத் தொலைக்கும் மக்களும்




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


இலங்கையின் சக்தி நெருக்கடி எழுப்பியுள்ள கேள்விகள் பல. மின்சாரம், எரிபொருள், எரிவாயு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுவதில் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் சொல்லி மாளாதாவை.

இலங்கையின் சக்தி தேவையை எதிர்வுகூறக்கூட இயலாத, கையாலாகாத அரசாங்கத்தின் கேடுகெட்ட நடத்தையால், இலங்கையர் அனைவரதும் வாழ்க்கை சீரழிகிறது. அனைத்துத் தவறுகளையும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறை என்ற ஒற்றைக் காரணியின் தலையில் கட்டிவிட்டு, அப்பால் நகர்ந்துவிட அனைவரும் முயல்கிறார்கள். இது அனைவருக்கும் வசதியானது. ஆட்சியாளர்களுக்கு இது நல்லதொரு வாய்ப்பு; கொள்கை வகுப்பாளர்களுக்கு தமது தொடர்ச்சியான தவறுகளை மறைக்கும் நல்லதோர் ஆயுதம்; மக்களின் கையறுநிலைக்கு விளக்கம் கொடுக்கும் ஒரு காரணி.

ஆனால், விரிவானதும் ஆழமானதுமான பார்வையில், குறுகிய நோக்கத்தினாலான கொள்கைவகுப்பும் குறிப்பிட்ட சிலரின் நலன்களுமே, இன்றைய சக்தி நெருக்கடிக்கான காரணிகள் என்பதை நாம் பேசுவதில்லை.

இலங்கையின் மின்சாரத் தேவை, கடந்த இரண்டு தசாப்தங்களாக தொடர்ச்சியாக அதிகரித்து வந்திருக்கிறது. 1990களின் நடுப்பகுதி வரை நீர்மின்சக்தியிலேயே இலங்கையின் மின்சார உற்பத்தி தங்கியிருந்தது. அதைத் தொடர்ந்து, அதிகரித்த மின்சாரத் தேவைகளுக்காக, நிலக்கரியிலும் பெற்றோலிலும் இருந்து மின்சார உற்பத்தி தொடங்கியது. காலப்போக்கில், இவை இரண்டிலும் இருந்தான மின்சார உற்பத்தியே பிரதானமானது.

மறுமுனையில், உலகளாவிய ரீதியில் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் ஊடு, மின்சார உற்பத்தி மலிவானதாக மாறியது. இலங்கை போன்ற நாடுகளில் காற்றாலைகளாலும், சூரியமின்கலங்களின் உதவியோடும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வளங்களும் வாய்ப்புகளும் இருந்த போதும், மின்சார உற்பத்திக்கு இலங்கை நிலக்கரியையும் டீசலையும் நம்பி இருக்கிறது.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சுவட்டு எரிபொருட்களின் பாவனையைக் குறைப்பதும் தடுப்பதும் அவசியமானது. இந்நிலையில், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவற்கான உலகளாவிய முயற்சிக்கு நாமும் பங்காற்ற வேண்டும். ஏனெனில், இது எமது வருங்காலத் தலைமுறையின் எதிர்காலம் பற்றியது.

இதைக் கருத்தில் கொண்டே, உலகளாவிய சக்தி நிலைமாற்றத்தின் அடிப்படை, நின்றுநிலைக்கக்கூடியதும் மலிவானதும் அனைவருக்குமானதும் சூழலுக்கு மாசற்ற சக்தி மூலங்களை நோக்கி நகர்கின்றது. எளிமையாகச் சொல்வதாயின், சுவட்டு எரிபொருட்களுக்குப் பதிலாக, புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதில், உலகின் பலநாடுகள் முனைப்பாயுள்ளன.

இலங்கை போன்ற நாடுகளில் ஆண்டு முழுவதும் கிடைக்கும் சூரிய ஒளியும் தீவாக இருப்பதன் விளைவால் கரையோரங்களில் வீசுகின்ற காற்றும், முறையே சூரியகலன்களையும் காற்றாலைகளையும் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பானது. இவை இரண்டும் இலங்கையின் சக்தித் தேவைகளுக்குப் பயன்படும் முக்கியமான வளங்கள். ஆனால், இவ்வளங்கள் அதன் முழுமையான பயன்பாட்டைப் பெறவில்லை.

இதன் பின்புலத்திலேயே, இலங்கையில் நிலவும் மின்சார நெருக்கடியை நோக்க வேண்டியுள்ளது. இலங்கையின் நிலக்கரி மீதான காதல் சொல்லி மாளாளது.

முதலாவது அனல்மின்நிலையம் அமைக்கப்பட்டது முதல், இலங்கையின் கொள்கைவகுப்பாளர்கள் தொடர்ச்சியாக அனல்மின்நிலையங்களை அமைப்பதில் அக்கறைகாட்டி வந்துள்ளார்கள். ஏன் இந்த அக்கறை என்பதற்குப் பலகாரணிகள் உண்டு. அதில் முதன்மையானது, நிலக்கரி கொள்வனவில் மேற்கொள்ளப்படும் ஊழல்.

கடந்த பத்தாண்டுகளில், இது குறித்துப் பல தடவைகள் தகவல்கள் வெளியாகியுள்ளன. நிலக்கரிக்கு மேலதிகமாக, பெற்றோலியத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரமும் இலங்கையின் மின்சார உற்பத்தியைச் சுவட்டு எரிபொருட்களில் தங்கியுள்ளதாக மாற்றியுள்ளது. இவை இரண்டும் இலங்கையின் அந்நியச் செலாவணியில் முக்கிய பங்காற்றுவன.

இலங்கை, கடந்த பத்தாண்டுகளில் புதுப்பிக்கத்தக்க சக்தி மீது கவனம் செலுத்தியிருந்தால், இன்றைய சக்தி நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும். இங்கு, கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்திக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவே என்ற ஐயம் எழுவது இயல்பானது.

கடந்த பத்தாண்டுகளில், இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களில் பெரும்பாலானவை, இலங்கையின் வடபகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டவை. இத்திட்டங்கள் அனைத்தும், பொதுமக்களின் எதிர்ப்பைச் சந்தித்தவை என்பதும் பொதுமக்களின் ஒப்புதல் இல்லாமல் செயற்படுத்தப்பட்டவை என்பதும் கவனிப்புக்குரியது.

மன்னாரில் அமைக்கப்பட்ட காற்றாலை உற்பத்தித் திட்டமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டது. இது தவிர்ந்த மிகுதி அனைத்தும் தனியாரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஆகும். வவுனியா, பளை, மறவன்புலவு, பூநகரி என இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தபடுகின்ற அனைத்து இடங்களிலும், இத்திட்டங்களுக்கு பாரிய எதிர்ப்பு நிலவியது; இன்னமும் நிலவுகிறது. ஆனால், புதுப்பிக்கத்தக்க சக்தியின் பெயரால், இவ்வெதிர்ப்புகள் கண்டுகொள்ளப்படவில்லை.

இவ்வெதிர்ப்புகளுக்குப் பல காரணங்கள் உண்டு. மன்னாரில் காற்றாலைகள் அமைந்துள்ள இடமானது, தனியாருக்குச் சொந்தமான காணிகளாகும். 1990களில் போரால் இடம்பெயர்ந்து, போரின் முடிவின் பின்னரே சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களிடமிருந்து காணிகளை அரசாங்கம் 'காணி சுவீகரிப்புச் சட்டத்தின்' அடிப்படையில் சுவீகரித்துக் கொண்டது. இதனால் அரசாங்கம் நிர்ணயித்த குறைந்த விலைக்கு இக்காணிகளை அரசுக்கே விற்க வேண்டி வந்தது.

மறவன்புலவில் காணிகளை மக்களிடமிருந்து வாங்கிய நிறுவனம், எதற்காக வாங்குகிறோம் என்று காரணத்தைச் சொல்லாமலேயே வாங்கியது. சில சந்தர்ப்பங்களில் மக்களுக்கு நல்லகுடி நீர் தருவதற்கான தொழிற்சாலை அமைக்கப்போவதாகச் சொன்னதான அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பூநகரியில் திட்டமிட்டபடி காற்றாலைகளும் சூரியகலன்களும் கொண்ட திட்டம் அமைந்தால், மாடுகளின் மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போவதோடு மீனவருக்கான கடலுக்கான பாதைகள் தடைப்படும் என்று கௌதாரிமுனை மக்கள் அச்சப்படுகிறார்கள். கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள், மக்களின் பல நலன்களைக் கருத்தில் கொள்ளப்படாமல் மேற்கொள்ளப்பட்டவை.

இப்போது, புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களை அரசாங்கம், அந்நியநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. 'அதானி' நிறுவனத்துக்கு மன்னாரிலும் பூநகரியிலும் வழங்கப்பட்டுள்ள திட்டங்கள் எவ்வாறான விளைவுகளைக் கொண்டு வந்து சேர்க்கப்போகின்றன?

சம்பூரில் அனல்மின் நிலையத்துக்காக அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீளக்குடியேற்றப்படவில்லை. அதே இடத்தில் இப்போது, இந்தியா அரசாங்கம் பாரிய சூரியசக்தி திட்டமொன்றை உருவாக்குகின்றது.

அந்நிய நிறுவனங்களிடம் இத்தகைய திட்டங்களை ஒப்படைப்பது எமது மின்சாரத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்தும். இலங்கை, இந்நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிவரும். அப்போது மின்சாரத்துக்கான விலையைத் தீர்மானிப்பது இந்நிறுவனங்களாகவே இருக்கும்.

ஒருவேளை, இலங்கை அரசாங்கம் கோருகின்ற விலைக்கு மின்சாரத்தை விற்பனை செய்ய இந்நிறுவனங்கள் விரும்பாதவிடத்து, அவை மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்யவியலும். இது நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்தப்படவுள்ள மின்கம்பி இணைப்பு மூலம் சாத்தியமாகும்.

இந்தியாவால் நடைமுறைப்படுத்தபடவுள்ள இத்திட்டங்கள், அடிப்படையில் இந்தியாவுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதை நோக்காகக் கொண்டவை என்பதை, 'அதானி' நிறுவனம் இலங்கைக்கு அனுப்பிய கடிதம் உறுதிசெய்கிறது.

இலங்கையின் நெருக்கடி, வளங்களை அந்நியர்களுக்குத் தாரை வார்ப்பதற்கான நியாயத்தை உருவாக்கியுள்ளது. இப்போது, எமக்கு அந்நியச் செலாவணி தேவை. அதற்காக எதையும் செய்யமுடியும் என்ற நிலையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

சக்தி நெருக்கடி, எவ்வாறு அந்நிய நிறுவனங்களுக்கு வாய்ப்பாக அமைந்ததோடு, எமது மின்சாரத்தேவைகளின் மீதான கட்டுப்பாட்டை இலங்கை இழந்து வருகிறதோ, அதேபோலவே ஏனைய பொதுத்துறைகளும் அந்நியக் கரங்களுக்குப் போகும் நாள் தொலைவில் இல்லை.

அரசியல்வாதிகளின் மீது மட்டும் பழியைப் போட்டுவிட்டு, அப்பால் நகரவியலாது. இலங்கையின் சக்தித் தேவைகளை நிறைவேற்றத் தேவையான சக்தி மூலங்களைக் கண்டடையாதது யார் குற்றம்? புதுப்பிக்கத்தக்க சக்தி நோக்கிய பயணத்தை நாம் மேற்கொள்ளாமல் போனது ஏன்? அமைச்சுகள், இலங்கை மின்சார சபை ஆகியன என்ன செய்து கொண்டிருந்தன?

புதுப்பிக்கத்தக்க சக்தியை, இலங்கை மின்சார சபை தொடர்ச்சியாக எதிர்த்து வந்தது ஏன்? இவையெல்லாம் பதிலை வேண்டும் வினாக்கள் மட்டுமல்ல, கொள்கை வகுப்பாளர்களும் தொடர்புடைய அரச அலுவலர்களும் மின்சார சபையும் என அனைவரும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள்.

ஆனால், அந்தப் பொறுப்புக்கூறலை நாம் கோருகிறோமா? கொள்கை வகுப்பாளர்கள், கொள்ளை வகுப்பாளர்களாக மாறிய தேசமதில், நாடு வளங்களையும் மக்கள் நிலங்களையும் இழப்பதில், அதிசயப்பட எதுவுமில்லை.

## கடிதங்கள்

### தற்காலிகமாக புனரமையுங்கள்



கிளிநொச்சி- முக்கொம்பன் வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென முக்கொம்பன் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கந்தபுரத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி, தற்காலிகமாக புனரமைக்கப்படும் நிலையில், இதன் தொடர்ச்சியாக வயல் வெளி ஊடாக, முக்கொம்பன் செல்லும் வீதியில் மூன்று வரையான பெருங்குழிகள் காணப்படுகின்றன.

இக்குழிகளைக் கிரவல் மூலம் நிரப்புவதன் மூலம், தடைப்பட்டுள்ள பஸ் சேவை, யாழ்ப்பாணத்துக்கான பயணத்தைத் தொடர முடியும்.

ஓராண்டுக்கு முன்னர், இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளரால் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதியை தற்காலிகமாகவேனும் புனரமைக்க வேண்டும் என்றும் வீதியில் உள்ள குழிகள் மூடப்பட்டாலேயே பஸ் சேவையை தொடர முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

கந்தபுரத்தில் இருந்து ஒரு கி.மீ வரையான வீதியில் தற்காலிக புனரமைப்புகள் நடைபெறும் நிலையில், மிகுதி மூன்று கி.மீ வரையான வீதியையும் தற்காலிகமாக புனரமைப்பதன் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ள பஸ் சேவையை தொடரக் கூடிய நிலைமை ஏற்படுமென முக்கொம்பன் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

வெரிட்டே ரிசேர்ச்சின்

# Infrastructure Watch அறிமுகம்




உட்கட்டமைப்பு கருத்திட்டக் கண்காணிப்பான் எனும் ஒன்லைன் டாஷ்போர்டை வெரிட்டே ரிசேர்ச் மும்மொழியில் தொடங்கியுள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு ட்ரில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 60 பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் முன்கூட்டியே தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதை இந்த டாஷ்போர்ட் கண்காணிக்கிறது.

2016ம் ஆண்டின் 12ம் இல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி, ஐ.அ.டொ. 100,000 (வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள்), ரூ. 500,000 (உள்ளூரில் நிதியளிக்கப்படும் திட்டங்கள்) ஆகியவற்றை விட அதிக தொகையைக் கொண்ட திட்டங்கள் குறித்து, அவை தொடங்குவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னதாக அதற்குப் பொறுப்பான அமைச்சர் முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். தகவல்கள் டிஜிட்டல் இலத்திரனியல் வடிவத்தில் அமைச்சின் வலைதளத்தில் தமிழ், சிங்களம் முடியுமானால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட வேண்டும்.

கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான அமைச்சின் வலைதளத்திலோ அரச முகவரகத்தின் வலைதளத்திலோ ஐந்து பரந்த வகைகளின் கீழ் 40 வெவ்வேறு வகையான தகவல்கள் கிடைப்பதை இந்த டாஷ்போர்ட் மதிப்பிடுகிறது. மேலும், தகவல் அறியும் கோரிக்கைகளுக்குப் பதிலாக வெரிட்டே ரிசேர்ச்சுக்குக் கிடைக்கப்பெற்ற பல்வேறு கருத்திட்டங்களின் கடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான அணுகலையும் இந்த டாஷ்போர்டு வழங்குகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இந்த டாஷ்போர்டில் இருந்து எக்ஸெல் தாள் வடிவில் தகவல் மற்றும் பகுப்பாய்வு தரவுத்தளத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு சில காரணங்களாக அமைவது வெளிப்படைதன்மையற்ற முடிவுகள் எடுக்கப்படுவதும் ஊழல் நிறைந்த திட்டங்களை பாரிய கடன் சுமைகளுடன் செயல்படுத்துவதுமாகும். பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்த தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்கள் மற்றும் அரச முகவரகங்களுக்கு இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உட்கட்டமைப்பு கருத்திட்டக் கண்காணிப்பானின் நோக்கமாகும். மேலும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும் செயல்முறையில் பொதுமக்கள் பங்குபெறுவதற்கான வாய்ப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கொமர்ஷல் வங்கிக்கு இரண்டு விருதுகள்




ஃபைனான்ஸ் ஏசியாவின் முதன்மை விருதுகள் 2022 இல் இலங்கை கொமர்ஷல் வங்கியானது மீண்டும் 'இலங்கையின் சிறந்த வங்கி' மற்றும் 'இலங்கையின் சிறந்த நிலையான வங்கி' ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அரச திட்டங்களுக்கு ஏற்ப வங்கியின் உயர் நிலை வாடிக்கையாளர் சேவை, நெகிழ்ச்சியான திறன் உள்ளிட்ட நேர்த்திமிக்க தொடர்ச்சியான வங்கி செயற்பாடுகளுக்காக இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 25 வருடங்களாக ஆசியாவின் நிதி மற்றும் மூலதனச் சந்தைகள் குறித்து நேர்மையாகவும் புறநிலையாகவும் கருத்துரை வழங்கிய இந்தப் பிரசுரத்தின் மூலம் கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறந்த வங்கியாக 11ஆவது வருடமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஃபைனான்ஸ் ஏசியா கன்ட்ரி விருதுகளில் வங்கியின் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கூறுகையில் "ஒன்றாக, இந்த விருதுகள் சிறந்த செயல்திறன் குறிகாட்டிகள் மூலம் வங்கியின் திறமையை அங்கிகரிப்பதைக் குறிக்கின்றன. வங்கிகள் பெரும்பாலும் நிதிப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படும் அதேவேளையில், நிலையான பங்குதாரர் மதிப்பை உருவாக்குவதற்கு முக்கியமான பல அளவீடுகள் உள்ளன" என்றார்.

கொமர்ஷல் வங்கியானது, இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர துறைக்கு மிகப்பெரிய கடன் வழங்கிவரும் வங்கியாக விளங்குகிறது.

இதற்கிடையில், கொமர்ஷல் வங்கியானது, பொறுப்பு வாய்ந்த நிதியளித்தல், நிதிய உள்ளடக்கம் மற்றும் நிலையான தயாரிப்புகள், சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையான வங்கியியலை உள்ளடக்கிய நிலைத்தன்மைக்கான அதன் மும்முனை அணுகுமுறைக்காக 'இலங்கையின் சிறந்த நிலையான வங்கி' என பெயரிடப்பட்டது.

ஒரு பசுமையான மற்றும் பாதுகாப்பான பணியிடத்தையும் கலாசாரத்தையும் உறுதிப்படுத்துவதன் மூலம் ஒரு பொறுப்பான அமைப்பாக இருப்பது மற்றும் நிலையான விநியோகச் சங்கிலியை மேம்படுத்துதல், சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஈடுபாடுகளை உள்ளடக்கிய அதன் சமூக முயற்சிகளுக்காக இந்த அங்கிகாரம் கிடைத்துள்ளது.





## DFCC வங்கி தனது நிலைபேண்தகைமை மூலோபாயத்துக்கு அமைவாக உலக சைக்கிள் தினத்தை அனுஷ்டிக்கிறது

அனைவருக்கும் ஏற்ற வங்கியும் மற்றும் வங்கித் துறையில் சைக்கிளில் அலுவலகத்திற்கு வருவதைத் தழுவிய முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான DFCC வங்கி உலக சைக்கிள் தினத்தை அண்மையில் கொண்டாடியது. உலக சைக்கிள் தினம் ஆண்டுதோறும் ஜூன் 3 ஆம்திகதி கொண்டாடப்படுவதுடன், மற்றும் ஒரு இலகுவான, கட்டுபடியான, தூய்மையானமற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு போக்குவரத்து வழிமுறையான சைக்கிள் ஓட்டுதலின்பல்வேறு ஆரோக்கியம் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்து கவனத்தையும் ஈர்க்கிறது.

இந்தத் தினத்தை நினைவுகூரும் வகையில், வங்கி தனது ஊழியர்களுக்கு 'அலுவலகத்திற்கு சைக்கிளில் வருகின்ற' தினமாக அறிவிப்பதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதுடன், 30 க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுநர்கள் பங்கேற்றிருந்த 15 கி.மீ தூர விநோத சைக்கிள் சவாரிக்கும் ஏற்பாடு செய்தது.








சென்னை:

அ.தி.மு.கவை கைப்பற்றுவதற்கு

# சின்னம்மா முயற்சி




அண்ணா திராவிட முன்னேற்ற கழக்கத்தில் (அ.தி.மு.க) ஒற்றைத் தலைமை கருத்தால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமிக்கும் இடையே மோதல் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இருவரும் நீதிமன்றங்களிலும், தேர்தல் ஆணையத்திலும் மாறி மாறி மனுக்களை கையளித்து வருகின்றனர்.

இதனிடையே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, அரசியல் சுற்றுப்பயணத்தை கடந்த 26ஆம் திகதி ஆரம்பித்தார். திருத்தணி முருகன் கோவிலில் சாமி தரிசனத்தை ஆரம்பித்து, ஆர்.கே.பேட்டையில் உள்ள அண்ணா, எம்ஜிஆர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது, "அ.தி.மு.கவை காக்கவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. என் தலைமையில் அ.தி.மு.க இருக்க வேண்டும் என்று தொண்டர்கள் ஆசைப்படுகின்றனர்" என தெரிவித்தார்.

இந்நிலையில், அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு வரவேண்டும் என சசிகலாவுக்கு அழைப்பு விடுத்து அவரது ஆதரவாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். இராயப்பேட்டை மற்றும் அ.தி.மு.க தலைமை அலுவலகத்தை சுற்றிலும் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளால் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

சசிகலா ஒருவேளை அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு செல்லத்திட்டமிட்டுள்ளாரா என்ற கேள்வியும் கட்சியினரிடம் எழுந்துள்ளது. இதையடுத்து, பழனிசாமி ஆதரவாளர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கோவை

## திருமணத்துக்கு வற்புறுத்தக்கூடாது



''பெண் குழந்தைகள் திருமணம் செய்துக்கொள்ள பெற்றோர் வற்புறுத்தக் கூடாது'' என, கோவையில் நடந்த நிகழ்ச்சியில் கிரண்பேடி உரையாற்றினார்.

பெண்களின் வணிக கூட்டமைப்பான, 'எப்.ஐ.சி.சி.ஐ - எப்.எல்.ஓ'வின் கோவை கிளை சார்பில், புதுச்சேரி முன்னாள் கவர்னர் கிரண் பேடியுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி, கோவையில் நடந்தது

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். பெண் குழந்தைகள் மற்றவர்களை சார்ந்து இருக்காமல், சுய சார்புடன் இருக்க பெற்றோர் கற்று தர வேண்டும். மேலும், அவர்கள் திருமணம் செய்துக்கொள்ள வற்புறுத்தக் கூடாது. பெண்கள் வகுப்பறை கல்வியை மட்டும் கற்காமல் விளையாட்டுத் துறையில் ஈடுபட வேண்டும். அப்போது போட்டி மனப்பான்மையும் வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் வரும். டென்னிஸ் விளையாட்டில் இருந்த அனுபவம் தான் நான் வகித்த பொறுப்புகளில் என்னை சிறப்பாக செயல்பட உதவியது என்றார்.

இராமாபுரம்

## இரட்டை தலைமைதான் நல்லது

### எம்.ஜி.ஆர் பேரன் கருத்து




ஓ.பன்னீர் செல்வம், ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்டவர் எனத் தெரிவித்துள்ள எம்.ஜி.ஆர் பேரன், அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்துக்கு (அ.தி.மு.க) இரட்டைத் தலைமைதான் வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இராமாபுரத்தில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் வீட்டில் அவரது பேரனும் அ.தி.மு.க எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணைச் செயலாளருமான 'ஜூனியர் எம்.ஜி.ஆர்' செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், "எம்.ஜி.ஆர் வேர்வை சிந்தி உழைத்து உருவாக்கிய கட்சி இது. அதன் பின்பு ஜெயலலிதாவால் காக்கப்பட்டது. ஜெயலலிதா இருக்கும் காலத்திலேயே ஓ.பன்னீர் செல்வத்தை நம்பி, கட்சிப் பொறுப்பைக் கொடுத்தார். ஓ.பன்னீர் செல்வம் அதற்கு விசுவாசமாக நடந்து கொண்டார். எம்.ஜி.ஆரின் பை-லாவின் படி தொண்டர்களால் தெரிவு செய்படுபவர்களையே அ.தி.மு.க கட்சி ஏற்றுக்கொள்ளும்.

தற்போது ஒற்றைத் தலைமை ஏனெனத் தெரியவில்லை, சட்டப்படி இருவரும் கையெழுத்து போட்டால்தான் கட்சியில் எந்த முடிவையும் எடுக்க முடியும். அப்படிப் பார்த்தால், சீனியர் ஓ.பன்னீர் செல்வம்தான். அவர்தான் தலைமையை ஏற்க வேண்டும். எடப்பாடி பழனிசாமி விட்டுக் கொடுக்கணும். எனிலும் இரட்டைத் தலைமை இருந்தால் கட்சி இன்னும் கட்டிக் காக்கப்படும்" என்றார்.

இப்போ கட்சியும் சின்னமும் ஓ.பன்னீர் செல்வத்திடம் தான் உள்ளது. இரண்டு பேரும் சேர்ந்து தலைமை வகித்தால் கட்சி, மிகப் பெரிய சக்தி வாய்ந்த கட்சியாக அசைக்க முடியாதபடி வளரும் என்று மேலும் தெரிவித்தார்.

புதுச்சேரி

## கைவரிசையை காட்டிய பெண் சாமியார் கைது

புதுச்சேரி மாநிலத்தில், தோஷம் நீக்குவதாக கூறி 37 பவுண் நகைகள், ரூ.12 இலட்சம் வரை பணமோசடியில் ஈடுபட்ட பெண் சாமியாரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுச்சேரி, இந்திரா நகர், பாரதிதாசன் வீதியை சேர்ந்தவர் முருகன். இவரது வீட்டின் மாடியில் வாடகைக்கு 2020ஆம் ஆண்டு சத்தியவதி என்பவர் இரண்டு மகள்களுடன் குடிவந்துள்ளார். அனைவருடன் நட்பாக பழகியுள்ளார். முருகனின் அக்கா உமாமகேஸ்வரி 16 வயதில் இறந்து விட்டார். தனது அக்காவின் புகைப்படத்தை முருகன் வீட்டில் வைத்திருந்தார்.

இதைப்பார்த்த சத்தியவதி, உங்கள் வீட்டில் தோஷம் இருக்கிறது. தோஷத்தை போக்கினால் தான் நீங்கள் அனைவரும் நன்றாக இருக்க முடியும் என்று முருகனின் மனைவி லட்சுமியிடம் கூறியிருக்கிறார்.

வீட்டில் உள்ள பெண்கள் மட்டுமே இந்தத் தோஷத்தை கழிக்க வேண்டும். ஆண்களுக்கு தெரியக்கூடாது என்று முருகனின் தாயார் மற்றும் மனைவி லட்சுமி ஆகியோரிடம் கூறியிருக்கிறார்.

அதன்பிரகாரம் ஆண்கள் இல்லாத நேரத்தில் பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. வீட்டில் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டன. பெண்கள் அனைவரையும் ஓர் அறைக்குள் வைத்து பூட்டிய பெண்சாமியார், பணத்தையும் நகைகளையும் திருடிசென்றுள்ளார். அதன்பின்னர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை

நளினி விடுதலை கோரிய வழக்கு

## தெரிவிக்காதவற்றை நீக்கிவிட உத்தரவு



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில், ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான தீர்மானத்தை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பியது சரியென அரசு வாதிட்டதாக பதிவு செய்யப்பட்ட கருத்துகளை நீக்கி, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்ய அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி, அதை ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலதாமதம் செய்தார்.

இதையடுத்து, ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

அந்தத் தீர்ப்பில், தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்காத கருத்துகள் மற்றும் வாதங்கள் இடம் பெற்றுள்ளதாகவும், அந்தப் பகுதியை நீக்க வேண்டும் என்று உள்துறை இணை செயலாளர் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், நளினியை விடுதலை செய்ய வேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானத்தை குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைத்தது சரி என்று தலைமை வழக்கறிஞர் தன் வாதத்தில் கூறியதாக தீர்ப்பில் உள்ளது.ஆனால், அவர் அப்படி எதுவும் கூறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், அமைச்சரவை தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்து, ஆளுநரோ அல்லது ஜனாதிபதியோ கையெழுத்திடவில்லை என்றால், நளினியை முன்கூட்டியே விடுதலை செய்ய முடியாது என்று தலைமை வழக்கறஞர் கூறியதாக தீர்ப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று ஆரம்பிக்கிறது ஐந்தாவது டெஸ்ட்:

# இந்தியாவை வீழ்த்துமா இங்கிலாந்து?




இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டியானது பேர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு அணிகளுக்குமிடையே கடந்தாண்டு நடைபெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் குறித்த போட்டியானது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நிறுத்தப்பட்டு தற்போது நடைபெறுகிறது.

கடந்தாண்டிலும் இரண்டு அணிகளும் நிறைய மாற்றங்களைச் சந்தித்துள்ள நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு முக்கியமான போட்டியாக இப்போட்டி காணப்படுகின்றது.

தவிர, இத்தொடரில் 2-1 என இந்தியா முன்னிலையில் இருக்கின்ற நிலையில் இப்போட்டியில் தோல்வியைத் தவிர்த்தால் இங்கிலாந்து மண்ணில் நான்காவது தடவையாக டெஸ்ட் தொடர் வெற்றியை இந்தியா பெறும்.

இப்போட்டிக்கு முன்பாக இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானமை இந்தியாவுக்கு பின்னடைவாகக் காணப்படுகின்றது. ஷர்மா தொற்றிலிருந்து மீளா விட்டால் அவரை அணியில் கே.எஸ். பாரத், செட்டேஸ்வர் புஜாரா, மாயங்க் அகவர்வால் ஆகியோரில் ஒருவர் பிரதியிடுவர் என்பதோடு ஜஸ்பிரிட் பும்ரா அணிக்குத் தலைமை தாங்குவார் எனப்படுகிறது.

மறுப்பகமாக இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளர் பென் போக்ஸும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடையா விடால் சாம் பில்லிங்ஸ் அணியில் தொடருவார். தவிர, நியூசிலாந்துக்கெதிரான கடந்த போட்டியில் விளையாடிய ஜேமி ஒவெர்ட்டனை ஜேம்ஸ் அன்டர்சன் பிரதிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பும்ரா, மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், இரவிச்சந்திரன் அஷ்வினை உள்ளடக்கிய பந்துவீச்சுவரிசையை எவ்வாறு இங்கிலாந்து எதிர்கொள்கின்றனர் என்பதிலேயே இப்போட்டியின் போக்கு அமையவுள்ளது.

## எவர்கிறீனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



எம்.என்.எம். அப்ராஸ்

சம்மாந்துறை, உதயபுரம் எவர் கிறீன் விளையாட்டுக் கழகத்துக்கு, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.எல். எம். மாஹிரால் விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ், எவர் கிறீன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் டி. மதன், விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## போல்டன் கால்பந்தாட்டக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகரின் மிகப் பழைமை வாய்ந்த போல்டன் கால்பந்தாட்டக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது புத்தளம்- மன்னார் வீதியில் அமைந்துள்ள தாய் சேய் சிகிச்சை நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் பதில் நீதவான் எம். இக்பால், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். நவவி உள்ளிட்ட பிரபலம் பெற்ற பல முன்னாள் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டதோடு கழக வளர்ச்சிக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மூத்த உறுப்பினர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது நடப்பு வருட நிர்வாக குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.



மே. தீவுகள் – பங்களாதேஷ்:

## இ – 20 சர்வதேச போட்டித் தொடர் இன்று ஆரம்பிக்கிறது



மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, டொமினிக்காவில் இன்றிரவு 11 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரானது இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள நிலையில் அதற்காக தமதணிகளை இறுதி செய்து கொள்வதற்கான தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

பேபியன் அலென், றொஸ்டன் சேஸ், ஷே ஹோப் போன்றோர் குழாமில் இல்லாத நிலையில் ஷமராஹ் ப்ரூக்ஸ், பிரண்டன் கிங், கைல் மேயர்ஸ் உள்ளிட்டோருக்கு தமதிடங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

மறுபக்கமாக பங்களாதேஷில் அணியில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் உலகக் கிண்ணத்துக்கு முன்னர் தம்மை நிரூப்பிப்பதற்கான தம்மை நிரூபிப்பதற்க்கான வாய்ப்பாக மெஹிடி ஹஸன் மிராஸ், தஸ்கின் அஹ்மட் ஆகியோருக்கு இத்தொடர் காணப்படுகின்றது.

ஜேர்மனி

நீதிமன்ற வாசலில் வீசப்பட்ட

# மனித தலையால் பரபரப்பு




ஜேர்மனியில் நீதிமன்றம் அருகே மர்ம நபர்கள் சிலர் மனிதத் தலையொன்றை வீசிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியில் பான் என்ற பகுதியில் அமைந்துள்ள நீதிமன்றத்தின் முன்பாகவே கடந்த 28 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


அதே சமயம் நீதிமன்றத்தில் இருந்து சற்று தொலைவில், தலையில்லாத உடல் ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 38 வயது மதிக்கத்தக்க ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா

8 வயதுச் சிறுவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில்

## குழந்தை உயிரிழப்பு



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில், 8 வயதுச் சிறுவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு வயதான பெண்குழந்தை உயிரிழந்துள்ளது.

அமெரிக்காவில் பல குற்றவழக்குகளில் தொடர்புடைய ரோடரிக் ராண்டால் என்ற நபர், தனது மகன், தோழி, தோழியின் மூன்று கை குழந்தைகளுடன் விடுதி ஒன்றில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் ராண்டால் வெளியே சென்ற போது, அவரது அலுமாரியில் இருந்த துப்பாக்கியை எடுத்து விளையாடி உள்ளதாகவும், இதன் போது எதிர்பாராத விதமாக ராண்டாலின் தோழியின் ஒரு வயது பெண் குழந்தையின் உடலை துளைத்து வெளியே வந்த குண்டு, மற்றொரு குழந்தையின் மீது பாய்ந்து உள்ளதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது. இதில் ஒரு வயது பெண் குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்து உள்ளதாகவும் இந்நிலையில் துப்பாக்கியுடன் அங்கிருந்து தப்பி ஓடிய ராண்டலை, சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தமை, கவனக்குறைவாக செயற்பட்டமை உள்ளிட்ட காரணங்களுக்காக பொலிஸார் கைது செய்துள்ளனர்.



கொலம்பியா

## சிறையில் தீ விபத்து; 51 கைதிகள் உயிரிழப்பு

கொலம்பியாவின் துலுவா நகரில் அமைந்துள்ள சிறைச்சாலையில் கடந்த 28 ஆம் திகதி கைதிகள் சிலர் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 51 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி

## 3,518 பேரைக் கொலை செய்ய உதவிய முதியவர்



இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் தலைமையிலான நாசி படைகள், ஜேர்மனியின் தலைநகர் பெர்லினுக்கு அருகே வதை முகாம் அமைத்து 2 இலட்சத்திற்கும் அதிகமான கைதிகளை அடைத்து வைத்திருந்தனர்.

அவர்களில் பல்லாயிரக்கணக்கான கைதிகள் பட்டினி, நோய், கட்டாய உழைப்பு, பிற காரணங்களால் உயிரிழந்தனர். மேலும் ஆயிரக்கணக்கான கைதிகள், துப்பாக்கி சூடு, தூக்கில் போடுதல், விஷ வாயுவைச் சுவாசிக்க வைத்தல் போன்ற தண்டனைகள் மூலம் கொல்லப்பட்டனர். இந்நிலையில் நாசி கால குற்றவாளிகள் மீது விசாரணை மேற்கொண்டு வரும் தற்போதைய ஜேர்மனி அரசு, நாசி வதை முகாமில் காவலராக பணியாற்றிய 101 வயது முதியவருக்கு எதிராக, கடந்த வருடம் விசாரணையைத் தொடங்கியது.

இதன்போது குறித்த முதியவர் மீது, 3,518 பேரைக் கொலை செய்ய உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் பெயர் விவரங்கள் வெளியிடப்படாத அந்த முதியவருக்கு, ஐந்து வருடங்கள் சிறை தண்டனை விதித்து ஜேர்மனி நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது.



தாய்லாந்து

109 வனவிலங்குகளை

## கடத்தியஇரண்டு பெண்கள் கைது

தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு 109 வன விலங்குகளைக் கடத்த முயற்சித்த இந்தியாவைச் சேர்ந்த இரண்டு பெண்களை, தாய்லாந்தின் சர்வதேச சுவர்ணபூமி விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

**“ தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு பயணித்த இந்தியாவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் 20 பாம்புகள், 50 பல்லிகள், 2 முள்ளம்பன்றிகள் உள்ளிட்ட 109 வனவிலங்குகளை கடத்த முயன்றனர்**

இதன் போது கைது செய்யப்பட்டவர்களிடம் 20 பாம்புகள், 50 பல்லிகள், 2 முள்ளம்பன்றிகள் உள்ளிட்ட 109 வனவிலங்குகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## அசத்தும் ஹைபிரிட் மின்சார வாகனம்

பிரித்தானியாவில் கார் மற்றும் மோட்டார் சைக்கிளை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஹைபிரிட் மின்சார வாகனம் பொது மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

நார்தன் லைட் மோட்டார்ஸ் என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட குறித்த வாகனத்தில், ஒருவர் சொகுசாகப் பயணிக்க முடியும். மேலும் கூடுதல் அம்சங்களுடன் குறித்த வாகனம் வெகுவிரைவில் சந்தைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 01 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.